நாள்- 20.06.2023

Case No. OS.102/2017 (PW1 Cross continuation)

PW.1– ரவி – பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கு சொத்து என் அப்பா நடராஜ செட்டியாருடைய சொத்து என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் என் அண்ணன் விஜயகுமார், நான் , தம்பி பாஸ்கரன் .என் சகோதரிகள் பெயர்கள் மலர், தேவகி மற்றும் நிர்மலா . என் அம்மா பெயர் ஞானசுந்தரி. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரனம் 30 அடி அகலம், 60 அடி நீளம் ஆகும். என் அப்பாவிற்கு வழக்கு சொத்துக்கள் தவிர வேறு எந்த சொத்துக்கள் கிடையாது. எங்களுக்குள் பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. என் தம்பி பாஸ்கரனுக்கு செட்டில்மெண்ட் என் அப்பா 18 x 60 அளவுள்ள வீட்டை என் அப்பா எழுதி வைத்தார். என் தம்பிக்கு செட்டில்மெண்ட் எழுதியபிறகுதான் எனக்கு என் அப்பா செட்டில்மெண்ட் எழுதினார். வழக்கிற்காக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் முதலில் செட்டில்மெண்ட் பத்திரத்தை நான்தான் ஏமாற்றி வாங்கினேன் என்றும் அதன்பிறகு என் தம்பி பாஸ்கரன் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. என் பெயருக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதும் சமயத்தில் அந்த வீட்டில் நானும், என் அண்ணனும் இருந்தோம். என் அண்ணன் பெயர் விஜயகுமார். அவர்தான் இந்த வழக்கின் பிரதிவாதி. என் அண்ணன் ஆற்காடு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.73/2016 என்ற வழக்கை என் அண்ணன் பாகப்பிரிவினை கேட்டு என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார், வேறு யார் யார் தரப்பினர்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த வழக்கில் நான் என் வழக்கறிஞர் மூலமாக நான் ஆஜராகவில்லை. அதன்பிறகு ஒரு வருடம் கழித்து நான் இந்த வழக்கை என் அண்ணன் பிரதிவாதி மீது தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள சொத்தில் நானும், என் அண்ணனும் இருக்கிறோம் என்ற வாசகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பிரதிவாதி என் அண்ணனை வழக்கு சொத்திலிருந்து காலி செய்து கொடுக்கும்படி பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுக்கும் சமயத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான்தான் தாவா அ அட்டவணை சொத்தில் சுவாதீனத்தில் இருப்பதற்கு ஆதாரமாக 2013 லிருந்து 2016 வரை மின்சார இணைப்பு, வீட்டுவரி ரசீது ஆகிய ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என் பெயரில் மாற்றிக்கொள்வதற்காக வீட்டுவரி ரசீது, மின்சார இணைப்பு ஆகியவற்றை கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன். 2016 ல் ஆற்காடு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.73/2016 வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் வீட்டு வரி ரசீது, மின்சார இணைப்பு ஆகியவற்றின் ஆவணங்கள் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 29.11.2016 உரிய

ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஆவணங்களை மாற்றியது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. விஜயகுமார் அசல் வழக்கு எண்.73/2016 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அவரது வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். நான் அதற்கு முன்பாக வரிரசீது, மின்சார இணைப்பு ஆகியவற்றை என் பெயரில் மாற்றிக்கொண்டேன். அதற்குரிய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி விஜயகுமார் இடத்தை ஆக்கிரமித்து கொள்ளவில்லை, தானசெட்டில்மென்ட் பத்திரம் என் பெயருக்கு என் அப்பா எழுதி கொடுப்பதற்கு முன்பே அவர் அந்த வீட்டில்தான் இருக்கிறார். என் அண்ணன் விஜயகுமார் இந்த வழக்கின் பிரதிவாதி அ அட்டவணை சொத்தில் சுமார் 15 வருடமாக குடியிந்து வருகிறார். என் அப்பா தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதும்போது என் உடன்பிறந்தவர்கள் அனைவரின் கையெழுத்து பெற்று எழுதி கொடுத்தாரா என்றால் இல்லை. என் அண்ணன் என் அப்பா எழுதி கொடுத்ததாக சொல்லும் தானசெட்டில்மென்ட் பத்திரத்தை ஒத்துக்கொள்ளவில்லை, என் அப்பாவை ஏமாற்றி எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொன்னார் அதனால் பஞ்சாயத்திற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் அண்ணன் விஜயகுமார், இந்த வழக்கின் பிரதிவாதியிடம் பஞ்சாயத்து பேசப்பட்ட விவரங்களை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வீடு கட்டுவதற்காக கட்டிட ப்ளான் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு புதுவீடு கட்டுவதற்கு உடன்பாடு இல்லை. புது வீடு கட்டுவதற்காகத்தான் பழைய வீட்டை இடிக்கப்போவதாக பிராது மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நானும், என் அண்ணன் இந்த வழக்கின் பிரதிவாதியும் சுவாதீனத்தில் இருப்பதால் தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்க தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற கட்டணத்தை குறைவாக கட்டியுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.